பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 21 வெள்ளிக்கிழமை 04.06.2021 கதிர் 77

## வவுனியாவில் இன்று தடுப்பூசிகள் ஏற்றல்

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தைச் சேர்ந்த 62 பேருக்கும், கிளிநொச்சி வளாகத்தைச் சேர்ந்த 60 பேருக்குமாக மொத்தம் 122 பேருக்கு இன்று வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் வைத்து கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட உத்தரவின் அடிப்படையில் 2

## மேலும் 886 பேர் சிக்கினர்!

### கொழும்பு வருவோர் பற்றி ஆராய 6 குழுக்கள்



நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 886 பேர் கடந்த 24 மணிநேரத்துக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அதேவேளை, அத்தியாவசிய சேவைகளுக்காகக் கொழும்புக்கு வருபவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஆறு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் உண்மையாலும், உரிய அனுமதியுடன் அத்தியாவசிய சேவைகளுக்காகவா 2

## அடுத்தகட்ட தடுப்பூசி விரைவில் கிடைக்கும்

### யாழ். மக்களின் ஆர்வத்தை வரவேற்கின்றார் சவேந்திர

இரண்டாம்கட்டத்தடுப்பூசிகள்விரைவில்யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்று இராணுவத் தளபதியும் கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக 'சினோபோர்ம்' தடுப்பூசிகளை ஏற்றுவதில் யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் காட்டிய ஆர்வத்தை வரவேற்கின்றோம். முதல் கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள் தான் யாழ். மாவட்ட மக்களுக்கு 2

# மக்களைக் காப்பாற்றவே நாட்டை முடக்கியுள்ளோம்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



**மக்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே நாட்டை முடக்கி வைத்துள்ளோம். நாட்டை முடக்குவது, ஜனாதிபதியினதோ அல்லது என்னுடைய தனித் தீர்மானமோ அல்ல. விசேட வைத்திய நிபுணர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே நாட்டை முடக்கத் தீர்மானித்தோம்.**

**- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.** 2

## 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

சீரற்ற காலநிலையால் 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, களுத்துறை, இரத்தினபுரி, மாத்தறை, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

இதன்படி காலி மாவட்டத்தின் நெலுவ பிரதேச செயலாளர் பிரிவுக்கும், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள மற்றும் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்கும், இரத்தினபுரி 2

## நாட்டைத் தொடர்ந்து முடக்கவே முடியாது!

### அமைச்சர் பவித்ரா கூறுகின்றார்



விசேட வைத்திய நிபுணர்கள் கூறுவதைப் போல் நாட்டை மாதம் முழுவதும் - வருடம் பூராகவும் முடக்கி வைத்துக் கொண்டிருந்தால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்துவிடும். நாட்டின் சுகாதாரம் பாதுகாக்கப்படுவது அவசியமானதே. ஆனால், அதைவிடவும் 2

## அமெரிக்காவின் தடுப்பூசி இலங்கைக்கும் கிட்டும்!

இரண்டரைக் கோடி கொரோனா வைரஸ் தடுப்பூசிகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இலங்கையையும் தெரிவு செய்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள நாடுகளிடமிருந்து தடுப்பூசிகளுக்கான கோரிக்கைகளை அமெரிக்கா பெற்றுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அமெரிக்கா தனது நன்கொடை அளவுகளில்கால்பகுதியை நேரடியாகத்தேவைப்படும் நாடுகள், அண்டை நாடுகள் மற்றும் அமெரிக்க உதவியைக் கோரிய பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளது.

இலங்கை தனது அவசர தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அமெரிக்காவிடம் தடுப்பூசிகளை முறையாகக் கோரியிருந்தது. 2

## இரத்தினபுரியில் மூவர் மண்சரிவில் காணோம்

இரத்தினபுரி, ஜூன் 04

சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி எல்லே தேவாலய விகாரைக்கு அருகில் ஏற்பட்ட மண்சரிவில், மூவர் காணாமல் போயுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து காணாமல் போன மூவரையும் மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அந்த நிலையம் கூறியுள்ளது.

இதேவேளை ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் விடுத்துள்ளது.

கண்டி, நுவரெலியா, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படும் ஆபத்து காணப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள், 100 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழை பெய்யும் பட்சத்தில் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குக

### பிரதமர் மஹிந்த பணிப்பு



சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உடனடி நிவாரணம் வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று முற்பகல் அலரி மாளிகையில் வைத்து அறிவுறுத்தினார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு அது தொடர்பில் அறிவித்த பிரதமர், பாதிக்கப்பட்டவர்களை மீட்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையை அந்தந்த மாவட்ட செயலாளர்களின் ஊடாக உடனடியாக செயற்படுத்துமாறும் தெரிவித்தார்.

அதற்குத் தேவையான நிதியை ஒதுக்குமாறு பிரதமர் இதன்போது நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவுக்கு அறிவுறுத்தினார்.

நாட்டின் பல பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக பல இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தாழ்வான பிரதேசங்கள் மழை நீரில் மூழ்கல், வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயங்கள் அவற்றில் பிரதானமாகும்.

மேல் மாகாணம், சப்ரகமுவ, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை மேலும் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்வதற்கு மக்களுக்கு தெரியப்படுத்துமாறு பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

குறித்த சந்திப்பில் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மக்களைக் காப்பாற் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இருக்கும் இலகுவான வழிமுறை நாட்டை முடக்குவதென்றால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தியாக வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் நாளாந்தம் 2 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும், மரணங்களும் அதிகரித்துள்ளன எனவும் சுகாதாரத் தரப்பினர் தொடர்ச்சியாக எமக்கு வலியுறுத்தினர்.

இந்நிலையில், தற்போது நாட்டை திறப்பது ஆரோக்கியமான விடயமல்ல என்பது எமக்கும் தென்பட்டது. ஏற்கனவே இரண்டு வாரங்கள் பயணத் தடை பிறப்பிக்கப்பட்டாலும் கூட அதில் முறையாக மக்கள் செயற்படாத நிலையொன்று காணப்பட்டது.

அதன் பின்னரும் ஒரு சில பகுதிகளில் மக்களின் அநாவசியச் செயற்பாடுகளை அவதானிக்க முடிந்தது. எனவே தான் 7ஆம் திகதி வரையில் பிறப்பிக்கப்பட்டிருந்த பயணத்தடையை மேலும் ஒரு வாரகாலம் நீடிக்கத் தீர்மானித்தோம்.

இந்தத் தீர்மானமானது ஜனாதிபதியின் தனித் தீர்மானமோ அல்லது நான் எடுத்த தனித் தீர்மானமோ அல்ல. நாட்டில் உள்ள விசேட வைத்திய நிபுணர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு அமைய, கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படுகின்றது.

எனவே, ஏற்கனவே 14 நாள்கள் பயணத்தடை பிறப்பிக்கப்பட்டாலும் கூட 21 நாள்கள் தொடர்ச்சியாகக் கட்டுப்பாடுகளை விதித்தால் மட்டுமே முழுமையான பெறுபேறுகள் வெளிப்படும்.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த இருக்கும் சரியானவழிமுறைநாட்டைமுடக்குவதென்றால் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதனால் மக்களுக்கு சிரமங்கள் ஏற்படும். ஆனால், அதனையும் தாண்டி மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே செயற்படுகின்றோம் - என்றார்.

## நாட்டைத் தொடர்ந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா என்பது உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள ஒரு தொற்றாகும். நூறு ஆண்டுகளுக்கு முன்னரும் இவ்வாறு ஒரு அழிவு வந்தது. இப்போது மீண்டும் அவ்வாறான அழிவொன்று ஏற்பட்டுள்ளது. இதில் ஏனைய நாடுகளை போன்றே நாமும் பாதிக்கப்பட்டுள்ளோம். ஆகவே, இந்தத் தாக்கங்களுக்கு யார் மீதும் குற்றம் சுமத்த முடியாது.

ஏனைய நாடுகளை விடவும் நாம் பாதுகாப்பான நிலையில் உள்ளோம் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல நாட்டின் சுகாதாரத்துறை வீழ்ச்சி காண்பதைப் போல் அல்ல, நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டால் பாரிய நெருக்கடியைச் சகலரும் எதிர்கொள்ள நேரிடும்.

ஒரு நாளைக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு மாத்திரம் 80 கோடி ரூபா செலவாகின்றது. ஏனைய சகல சுகாதார செயற்பாடுகளுக்கும்கோடிக் கணக்கான பணம் செலவாகின்றது. எனவே, நாட்டின் சுகாதாரம் அவசியம். ஆனால், அதைவிடவும் நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில்கொள்ள வேண்டும் - என்றார்.

## 7 மாவட்டங்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தின் எஹலியகொட, கலவான, அயகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் 2ஆம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவுக்கும், களுத்துறை மாவட்டத்தின் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்கும், மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர பிரதேச செயலாளர் பிரிவுக்கும், நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் எலபாத, கிரிஎல்ல, குருவிட்டை, இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் 600,000 டோஸ்களும் அடங்கும்.

இந்தநிலையில் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் நாட்டிற்கும் குறிப்பிட்ட ஒழுங்குமுறையின் கீழ் குறிப்பிட்ட தடுப்பூசிகள் மற்றும் தொகைகள் தீர்மானிக்கப்பட்டு பகிரப்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

நாம் இந்த தடுப்பூசி அளவுகளைப் பகிர்ந்துகொள்வது, உதவிகளைப் பெறவோ அல்லது சலுகைகளைப் பெறவோ அல்ல. உயிரைக் காப்பாற்றுவதற்கும், தொற்றுநோய்க்கு முற்றுப்புள்ளி வைப்பதில் வழிநடத்துவதற்கும், உதாரண அடிப்படையில் இதனை பகிர்ந்து கொள்கிறோம்" - என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.

தான் பகிர்ந்து கொள்ளும் முதல் இரண்டரைக் கோடி எண்ணிக்கைக்கான உத்தேச ஒதுக்கீடு திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது. இதன்படி, இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மாலைதீவுகள்,மலேசியா,பிலிப்பைன்ஸ், வியட்நாம், இந்தோனேஷியா, தாய்லாந்து, லாவோஸ், பப்புவா நியூகினியா, தாய்வான் மற்றும் பசுபிக் தீவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளைமில்லியன்கணக்கான அமெரிக்க தடுப்பூசிகளை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வது அமெரிக்க அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

## மேலும் 886 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர் என்பது தொடர்பில் இக்குழு பரிசோதிக்கும்.

எனவே, அநாவசியமான முறையில் கொழும்புக்குள்வந்தால்அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## அடுத்தகட்ட தடுப்பூசி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டன. மூன்று நாள்களில் அவை நிறைவடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினர் உள்ளிட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியினர் மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஆகியோருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி முதல் கட்ட கொரோனாத் தடுப்பூசிகளை யாழ். மாவட்ட மக்கள் பெற்றுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் ஊடாகத்தான் தடுப்பூசி ஏற்றும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சாராதவர்களும் தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளனர். இதனால் ஒதுக்கப்பட்ட தடுப்பூசிகள் விரைவாக முடிவடைந்துள்ளன.

இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் விரைவில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படும். அதேவேளை, வடக்கிலுள்ளஏனையமாவட்டங்களிலும் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

## வவுனியாவில் இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாளர்களுக்குத் தடுப்பூசி வழங்கும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தவகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் 2 ஆயிரத்து 100 பேருக்கு தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தின் யாழ். வளாகப் பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டிருந்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.மாநகர எல்லை திருநெல்வேலி பகுதிகளில் நல்ல நிலையிலுள்ள வீடு வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு
077 307 8799

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்
உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள
076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# விவசாயப் புரட்சிக்கு இது தருணமா?

வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களைத் தந்து நிற்கின்றான் செந்தாப் போதகன், பொய்யா மொழிப் புலவன் நமது திருவள்ளுவப் பெருந்தகை.

எந்தக் காரியத்தையும் உரிய காலத்தில் உரிய தருணத்தில் செய்தால் வெற்றி கொள்ளலாம். காலம் தவறின் அது பிழைத்துப் போகும் என்பதை வள்ளுவன் காட்டுகின்றான்.

பருவத்தோடு ஒட்ட ஒழுகல், திருவினைத்
தீராமை ஆர்க்கும் கருவி.

– என்றார் வள்ளுவர். காலம் அறிந்து செயல் முடிப்பதானது ஒருவனிடம் உள்ள செல்வம் அவனிடமிருந்து நீங்காது நிலையாகக் கட்டி வைக்கும் கயிறு போன்றது ஆகும் என்கிறார் அவர்.

தனி மனிதர்களுக்கு மட்டுமல்ல. நாட்டின் இயக்கத்துக்கும் இது பொருத்தமானது. ஆனால் நாட்டின் தலைமை சில விடயங்களைக் காலம் அறியாமல் கையாண்டு நாட்டையே குட்டிச் சுவராக்கப் போகின்றது என்ற அச்ச நிலைமை தோன்றியுள்ளது.

ஏற்கனவே கொரோனாப் பேரிடர் என்ற அச்சுறுத்தல் ஓராண்டு தாண்டியும் நீடிக்கின்றது. இதனால் மக்களின் வாழ்வியலே முடங்கிப் போய்க் கிடக்கின்றது. அபிவிருத்தி நடவடிக்கைகள் எல்லாம் படுத்து விட்டன. அன்றாட வாழ்வுக்கே மக்கள் அல்லாடும் நிலைமை. இதற்கு – அரசை – ஆட்சிப் பீடத்தை – குறை சொல்லிப் பயனில்லை. இது இலங்கைக்கு மாத்திரமான பிரச்சினை அல்ல. உலகளாவிய பிரச்சினை. ஆனால் இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டு மீண்டெழுவதற்கு முன்னர் புதிய பிரச்சினைக்குள் தலையைக் கொண்டு போய் நீட்டி, வினையை விலைக்கு வாங்குவது பொருத்தமற்றது.

'பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி' என்ற நிலையில் பொதுமக்கள். மக்களின் வாழ் நிலைமையை வழமைக்குக் கொண்டு வருவதுதான் இப்போது முன்னுரிமைக்குரிய விடயம். புதிய, புதிய சிக்கல்களைக் கொண்டு வரும் சவால்களைப் பரிசோதிக்கும் – அல்லது நாமே இழுத்துப் போட்டு சந்திக்கும் – வேளை அல்ல.

அசேதன உரங்களை – இரசாயன உரங்களை – அடியோடு ஒழித்துத் தடை செய்யும் ஒரு சவால் மிக்க நடவடிக்கையை இந்தச் சமயத்தில் அரசு முன்னெடுப்பது புத்தி சாதுரியமானதா என்று நிபுணர்கள் பலரும் கேட்கின்றனர்.

சேதனப் பசளைகள், இரசாயனம் கலக்காத களை கொல்லிகள், சேதனப் பொருள்கள் மூலம் பீடை அகற்றுதல் போன்றவற்றுடனேயே காலம் காலமாக நமது விவசாய முறைகள் மேற்கொள்ளப்பட்டன. நமது பாரம்பரிய பயிர்ச் செய்கைகள் அப்படித்தான் அமைந்தன.

ஆனால் இன்றோ, உயிரியல் அல்லது மரபுமுறை மாற்றத்துக்குட்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் மூலப் பொருள்களில் இருந்து எல்லாமே அசேதன உற்பத்திகள் மூலமான ஊக்குவிப்புத்தான். அதன் எல்லையைத் தொட்டு நிற்கின்றோம்.

அதனால் அபரிமிதமான உற்பத்தி. விளைச்சல். வருவாயும் கூட. ஆனால் சமூகத்துக்கு – மக்களுக்கு – நாம் மிச்சம் வைத்தது நோயும், பிணியும் பாதிப்புகளும்தான்.

இந்தப் பிரச்சினையிலிருந்து நாமும், மக்களும் மீள வேண்டுமானால் அசேதன உரங்கள், இரசாயனப் பொருள்கள், இராசாயக் களை கொல்லிகள் போன்றவற்றை அடியோடு தவிர்ப்பது இன்றியமையாதது.

ஆனால், அது ஒரு சாதாரண விடயம் அல்ல. விவசாயத் துறையில் ஒரு மீள் புரட்சியாக – கமத்தொழில் போராக – முன்னெடுக்க வேண்டிய விவகாரம்.

அதற்கு இந்தச் சமயம் – இப்போதைய நெருக்கடி நிலைமை – பொருத்தமானதா என்பதை அரசு ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்தித்து இவ் விடயத்தில் கால் வைக்க வேண்டும்.

ஒரு முனையில் கொரோனாப் பேரிடர் என்ற மூன்றாம் உலக யுத்தத்துக்குள் மாட்டி நிற்கின்றோம். போதாக்குறைக்கு நமது கடல் வளத்துக்கு ஆப்பு வைப்பது போல விஷப் பொருள்கள் அடங்கிய 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் இலங்கைக் கடல் எல்லையில் தீப்பிடித்து எரிந்து விளைவித்த அனர்த்தம். இது போன்ற சிக்கல்களுக்கு நடுவில் அசேதனப் பொருள்களையும், இரசாயன மருந்துகள் மற்றும் உரங்களையும் அடியோடு தவிர்த்து விவசாயம் என்றபுதிய பசுமைப் புரட்சிக்கான – கமத்தொழில் பெரும் போருக்கான – மற்றொரு யுத்தமுனையை சம காலத்தில் திறப்பதா என்பது குறித்து அரசு மீள ஒரு தடவை ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த அசேதன இரசாயனங்களையும், இரசாயன மருந்துகள், களை கொல்லிகளையும் நமது விவசாயிகள் தாமாகப் பயன்படுத்த முனையவில்லை. நாட்டின் விவசாயத் திணைக்களமே கொஞ்சம் கொஞ்சமாகப் பரிந்துரைத்து அவற்றை நம் விவசாயிகள் தலை மீது கட்டியடித்து, அந்தப் பாவனையில் அவர்களை மூழ்கடித்தது.

அவற்றை ஒரேயடியாக நிறுத்துவதானால் உரிய மாற்று சேதனப் பசளைகள், சேதன மருந்துகள், களை கொல்லிகள் தேவை. அசேதன உரங்களை நிறுத்தியதும் தரமான விளைச்சல் கிடைக்கும். எனினும் உற்பத்தி அளவு வீழ்ச்சியடையும். சேதன உரங்கள், மருந்துகளின் இறக்குமதிக்கு செலவாகும் அந்நிய செலாவணியை விட உற்பத்தி வீழ்ச்சியால் எதிர்கொள்ளப்படப் போகின்ற வருமான வீழ்ச்சி பல மடங்காக இருக்கும்.

இந்த நெருக்கடிகளை எல்லாம் எதிர்கொள்ள அரசு தயாரா என்பதுதான் கேள்வி. கடைசியாக இந்தத் தடைகள் நாட்டில் மஞ்சலுக்கு ஏற்பட்ட கதி போல சகல விளைச்சல் பொருள்களுக்கும் தருவதாக அமைந்து விடா விட்டால் சரிதான்.

# இலங்கை உள்ளிட்ட ஏழு நாடுகள் பிரித்தானியாவின் சிவப்பு பட்டியலில்

இலங்கை உள்ளிட்ட 7 நாடுகளை பிரித்தானியா சிவப்பு பட்டியலில் இணைத்துள்ளது.

இலங்கை தற்போது செம்மஞ்சள் பட்டியலில் உள்ளதென்றும் ஜூன் 8ஆம் திகதி முதல் சிவப்பு பட்டியலில் இணையும் என்றும் பிரித்தானியா குறிப்பிட்டுள்ளது.

இந்த சிவப்பு எச்சரிக்கை எதிர்வரும் 8ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் செல்லுபடியாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் பஹ்ரேன் போன்ற நாடுகளும் இதில் அடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள 7 நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டிலிருந்து பிரித்தானியாவிற்கு வருகை தரும் நபர்கள் கட்டாயம் தனிமைப்படுத்தப்படுவர் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் பிரித்தானியாவின் சிவப்பு பட்டியலில் உள்ள நாடுகளைச் சேர்ந்த பயணிகள், தடுப்பூசி செலுத்தியிருந்தாலும் பிரித்தானியாவுக்குச் செல்வதற்கு முன்பாக கொரோனாப் பரிசோதனை செய்ய வேண்டுமெனவும் அறிவித்துள்ளது.

அதேநேரம், சிவப்பு பட்டியலில் உள்ள எந்த நாட்டுக்கும் செல்ல வேண்டாம் என்று பிரித்தானிய பிரஜைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# உலர்ந்த மஞ்சள் மற்றும் பெரிய வெங்காயம் விதைகள் கடத்தல்; 6 பேர் சந்தேகத்தில் கைது



சட்டவிரோதமான முறையில் உலர்ந்த மஞ்சள் மற்றும் பெரிய வெங்காய விதைகள் தொகை ஒன்றை இந்நாட்டுக்கு கொண்டு வந்த 6 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், வட்டக்கல்லிய பகுதியில் கடற்படையினர் மேற்கொண்டுள்ள சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக இந்த நாட்டுக்கு கொண்டு வர முயன்ற 362 கிலோ 950 கிராம் உலர்ந்த மஞ்சள் மற்றும் 571 கிலோ 400 கிராம் பெரிய வெங்காய விதைகள் நேற்று (வியாழக்கிழமை) இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

கடல் வழியாக மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கடற்படை பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நேற்று மேற்கு கடற்படைக் கட்டளையின் கடற்படையினர் இலங்கை கடலோர காவல்படை மற்றும் சிலாபம் பொலிஸாருடன் இணைந்து சிலாபம், வட்டக்கல்லிய பகுதியில் மேற்கொண்டுள்ள சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, களப்பு வழியாக வந்த சந்தேகத்துக்கு இடமான 02 டிங்கி படகுகளில் இருந்து இறக்கப்பட்ட 362 கிலோ 950 கிராம் உலர்ந்த மஞ்சள் கொண்ட 14 சாக்குகளும் 571 கிலோ 400 கிராம் பெரிய வெங்காயம் விதைகள் நிரப்பப்பட்ட 22 சாக்குகளும் கைது செய்யப்பட்டமையுடன் குறித்த நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்ட 02 டிங்கி படகுகள் மற்றும் 06 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும், சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட இந்த உலர்ந்த மஞ்சள் மற்றும் பெரிய வெங்காயம் விதைகள் கொண்டு செல்ல வந்ததாக நம்பப்படுகின்ற ஒரு சிறிய லொறி மற்றும் இரண்டு நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கொவிட் 19 பரவுவதைத் தடுக்க வழங்கப்பட்ட சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை மூலம் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 30 முதல் 50 வயதுக்குட்பட்ட சிலாபம் மற்றும் பன்னல பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட உலர்ந்த மஞ்சள், பெரிய வெங்காயம் விதைகள், 2 டிங்கி படகுகள், லொறி மற்றும் 06 சந்தேக நபர்களும் சிலாபம் பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

# யாழில் கட்டுப்பாட்டை மீறி பள்ளிவாசலில் ஒன்று கூடிய 14 பேர் தனிமைப்படுத்தலில்!

பயணக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை மீறி பள்ளிவாசல் ஒன்றில் ஒன்று கூடி தொழுகையில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 பேர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் புகுதியில் சுகாதார உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத் தில் சிலர் பள்ளிவாசலிலும் சிலர் அவர்களின் வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பயணக்கட்டுப்பாடு மீண்டும் நீடிக்கப் பட்டபோதிலும் யாழ்ப்பாணத்தில் பரவலாக மக்கள் நடமாட்டம் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதற்கு மத்தியிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நுகர்வோர் பாவனைக்குதவாத மீன்கள் சந்தைக்கு வராதாம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் பாதிப்புக்குள்ளான கடல் பிரதேசத்தில் உள்ள மீன்களின் உடல்களில் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் இருப்பது இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்படவில்லை என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

குறித்த கடல் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன எனவும் நுகர்வுக்கு பொருத்தமற்ற மீன்கள் சந்தைக்கு வராது என்றும் அவர் கூறினார்.



மேலும், பயணக் கட்டுப்பாடு விதித்திருந்தாலும் நடமாடும் வாகன வியாபாரிகளினால் மீன் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் மீன்வளம் மற்றும் கடற்கரை உட்பட கடல் பகுதியின் நீண்டகால விளைவுகள் குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனவும் கடல்சார் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.




# இந்தியாவில் தினசரி கொரோனாவால் உயிரிழப்போர் எண்ணிக்கை மூவாயிரத்துக்கும் கீழாகக் குறைந்தது

இந்தியா முழுவதுமாக தினசரி கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை நேற்றைய தினம் சற்று உயர்ந்து, ஒரு லட்சத்து 34 ஆயிரமாகப் பதிவாகியுள்ளது. அதேவேளையில், உயிரிழப்பு எண்ணிக்கை மூவாயிரத்துக்கும் கீழ் குறைந்துள்ளதாகத் தரவுகள் வெளியாகியுள்ளன.

இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நாடு முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாவால் ஒரு லட்சத்து 34 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதனால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 84 லட்சத்து 41 ஆயிரத்து 986 ஆக உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரேநாளில் 2,887 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பதிவாகியுள்ளதால், இதுவரை இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 37 ஆயிரத்து 989 ஆக அதிகரித்துள்ளது. அதே நேரம், இந்த ஒரே நாளில் 2 லட்சத்து 11 ஆயிரத்து 499 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் தற்போது 17 லட்சத்து 13 ஆயிரத்து 413 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஒரேநாளில் 24 லட்சத்து 26 ஆயிரத்து 265 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட நிலையில், இதுவரை 22 கோடியே 10 லட்சத்து 43 ஆயிரத்து 693 பேருக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் புதிதாக 24,405 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 32,221 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் 460 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தமிழக சுகாதாரத் துறையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வட்ஸ்அப் நிறுவனம் தந்திரமான வேலைகளில் ஈடுபட்டு வருகிறது

### உயர் நீதிமன்றத்தில் இந்திய அரசு குற்றச்சாட்டு





'வட்ஸ்அப் நிறுவனம் தனது புதிய கொள்கைகளை மக்களிடம் திணிப்பதற்கு, தந்திரமான வேலைகளில் ஈடுபட்டுவருகிறது' என டெல்லி உயர் நீதிமன்றத்தில் இந்திய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

வட்ஸ்அப் நிறுவனம் நடைமுறைப்படுத்தியுள்ள தனிநபர் தகவல் பாதுகாப்பின் புதிய கொள்கை தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கில், பதில் மனுவைத் தாக்கல் செய்யும்படி இந்திய மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனடிப்படையில் இந்திய அரசு விரிவான விவரங்கள் அடங்கிய பிரமாணப் பத்திரத்தை நேற்றுத் தாக்கல் செய்தது.

அதில், 'வட்ஸ்அப் நிறுவனம் தனது புதிய கொள்கைகளை ஏற்கும்படி பயனாளர்களுக்கு தினமும் அறிவிப்பினை அனுப்பி வலியுறுத்தி வருகிறது. இதன்மூலம், தனது கொள்கைகளை பயனாளர்களின் மீது திணிப்பதற்கான தந்திரமான வேலைகளை அது தொடர்ந்து செய்து வருகிறது. இதைத் தடுக்க நீதிமன்றம் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்' என்று கோரப்பட்டுள்ளது.

அதேபோன்று, 'இந்திய அரசு புதிதாகத் தயாரித்துள்ள தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது. ஆனால், அதற்கு முன்பாக தனது கொள்கைகளை மக்களை ஏற்கவைக்கவட்ஸ்அப்நிறுவனம்முயற்சிக்கிறது. அதற்காகத்தான், இவ்வாறு செயல்படுகிறது. வட்ஸ்அப் நிறுவனத்தின் புதிய கொள்கைகள், இந்திய அரசு கொண்டு வரும் தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டத்துக்கு முற்றிலும் எதிராக உள்ளன' எனவும் இந்திய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

## இயக்குநர் ரங்கராஜன் மறைவு; கமல்ஹாசன் இரங்கல் தெரிவிப்பு





புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ஜி.என். ரங்கராஜன் வயது மூப்பின் காரணமாக தனது 90 ஆவது வயதில் நேற்று காலமானார். அவரது மறைவையொட்டி நடிகர் கமல்ஹாசன் இரங்கல் குறிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

'நான் சினிமாவில் நுழைந்த காலம் தொட்டு தான் இறக்கும் தருவாய்வரை என் மீது மாறாத பிரியம் கொண்டவர் இயக்குநர் ஜி.என். ரங்கராஜன். கடுமையான உழைப்பால் தமிழ் சினிமாவில் தனக்கென்று தனித்த இடத்தை உருவாக்கிக் கொண்டவர். இன்றும் விரும்பிப்பார்க்கப்படும் பலதிரைப்படங்களைத் தமிழ் ரசிகர்களுக்குத் தந்தார். அவரது நீட்சியாக மகன் ஜி.என்.ஆர். குமரவேலனும் சினிமாவில் தொடர்கிறார்.

கல்யாணராமன், மீண்டும் கோகிலா, கடல் மீன்கள், எல்லாம் இன்பமயம், மகாராசன் என என்னை வைத்து பல வெற்றிப் படங்களைத் தந்தவர். என் மீது கொண்ட மாறாத அன்பால், தான் கட்டிய வீட்டிற்கு கமல் இல்லம் என்று பெயர் வைத்தார். இன்று அந்த வீட்டிற்கு சற்றேறக்குறைய 30 வயதாவது இருக்கக் கூடும். 'ஜி.என்.ஆர். தன் வீட்டில் இல்லையென்றால் ஆழ்வார்பேட்டை எல்டாம்ஸ் ரோட்டில்தான் இருப்பார்!' என்றே எங்களை அறிந்தவர்கள் சொல்வார்கள். சினிமாவில் மட்டுமல்ல, மக்கள் பணியிலும் என்னை வாழ்த்தி யவர். எப்போதும் எங்கும் என் தரப்பாகவே இருந்தவர். சில நாள்களுக்கு முன்பு கூட, முகச்சவரம் செய்து பொலிவோடு இருக்க வேண்டும். கமல் பார்த்தால் திட்டுவார் என்று சொல்லி வந்தார் எனக் கேள்வியுற்றேன். தான் ஆரோக்கியமாக இருப்பதையே நான் விரும்புவேன் என்பதை அறிந்தவர்.

நிபந்தனையற்ற தூய பேரன்பினைப் பொழிந்த ஓர் அண்ணனை இழந்துவிட்டேன். அண்ணி ஜக்குபாய்க்கும், தம்பி இயக்குனர் ஜி.என்.ஆர். குமரவேலனுக்கும்குடும்பத்தாருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கமல் தனது இரங்கல் குறிப்பில் தெரிவித்திருக்கிறார்.

## டெல்லியில் அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடு; கௌதம் கம்பீரின் அறக்கட்டளை மீது குற்றச்சாட்டு



இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய பா.ஜ.க. எம்.பியுமான கௌதம் கம்பீர், கொரோனா சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் 'பேபிப்ளு' என்ற மாத்திரையை தனது அறக்கட்டளை மூலம் இலவசமாக பலருக்கும் வழங்கியிருந்தார். 'டெல்லியில் பேபிப்ளு மாத்திரைக்கான தட்டுப்பாடு இருக்கும் போது, கௌதம் கம்பீருக்கு இவ்வ ளவு மாத்திரைகள் எவ்வாறு கிடைத்தன?' என்ற சர்ச்சை எழுந்தது.

இதேபோன்று, ஆம் ஆத்மி கட்சியின் எம்.எல்.ஏயான பிரவீன் குமார் மீதும் மருந்துகளைப் பதுக்கல் செய்தார் எனக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. டெல்லி உயர் நீதிமன்றம் வரை கொண்டுசெல்லப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுகளால், இந்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் கடும் கண்டனத்துக்கு ஆளானது.

குறித்த சிலருக்கோ அல்லது சில நிறுவனங்களுக்கோ மட்டும் இவ்வாறான அத்தியாவசிய மருந்துகள் பெருந்தொகையாக வழங்கப்பட்டுவருவது குறித்து பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன. இதைத் தொடர்ந்து, கம்பீரின் அறக்கட்டளை மீதும், பிரவீன் குமார் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் நேற்று அறிவித்துள்ளது.

## அரசை விமர்சிப்பவர் மீது தேசத்துரோக வழக்கைப் பதிவதா? ஊடகவியலாளர் வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் காட்டம்

'அரசை விமர்சிக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் மீது தேசத்துரோக வழக்கைப் பதிவு செய்யக் கூடாது' என இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'தீவிரவாதிகள் மீதான தாக்குதல்களையும், இராணுவ வீரர்களின் உயர்வான தியாகங்களையும் பிரதமர் நரேந்திர மோடி தனது தேர்தல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்' என தனது யூடியூப் தளத்தில் பதிவிட்டார் என ஊடகவியலாளர் வினோத் துவா மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதை எதிர்த்து வினோத் துவா தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், நேற்று தீர்ப்பினை வழங்கியது.

அதில், 'அரசை விமர்சிக்கிறார்கள் என்ற காரணத்திற்காக யார் மீதும் தேசத்துரோக வழக்கைப் பதிவு செய்யக்கூடாது. ஒரு குறிப்பிட்ட நபருடைய செயலானது வன் முறையைத் தூண்டும் வகையிலும், சட்டம் ஒழுங்குக்கு குந்தகம் விளை விக்கும் வகையிலும் இருந்தால் மட்டுமே அது போன்ற வழக்கைப் பதிவு செய்ய வேண்டும். இதைப் பல்வேறு முக்கிய வழக்குகளில் உச்சநீதிமன்றம் ஏற்கனவே தெளிவாகக் கூறியுள்ளது.

அப்படியிருக்கையில், பொது அமைதிக்கு ஆபத்து விளைவிக்கும் கருத்துகள் எதையும் கூறாத வினோத் துவா மீது எப்படி தேசத்துரோக வழக்கைப் பதிவு செய்ய முடியும்? இது, அதிகார துஷ்பிரயோகம். அவர் மீதான வழக்கை உச்ச நீதிமன்றம் ரத்துச் செய்கிறது' என நீதிபதிகள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலின் பிரதமராக நப்தாலி பென்னட்



இஸ்ரேல் நாட்டில் 2009ஆம் ஆண்டுலிருந்து மார்ச் 31ஆம் திகதி பெஞ்சமின் நேட்டன்யாஹு பிரதமராக இருந்து வந்தார். அங்கு 2 ஆண்டுகளாக 4 முறை நாடாளுமன்ற தேர்தல் நடந்தும் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

கடைசியாக கடந்த மார்ச் மாதம் 23ஆம் தேதி நடந்த தேர்தலில், மொத்தம் உள்ள 120 இடங்களில் பிரதமர் பெஞ்சமின் நேட்டன்யாஹுவின் லிகுயிட் கட்சி 30 இடங்களைப் பிடித்தது.

தனிப்பெரும் கட்சியாக வந்தபோதும் அவரால் கூட்டணி அரசு அமைக்க முடியவில்லை. இதனால் அங்கு இழுபறி நிலைமை நீடித்தது.

இந்த நிலையில் அங்கு 8 எதிர்க்கட்சிகள் ஒன்றாய் கரம் கோர்த்து ஆட்சி அமைக்க நேற்று முன்தினம் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் யேஷ் அதிட் (17 இடங்கள்), காஹோல் லாவன்- புளூ அண்ட் ஒயிட் (8 இடங்கள்), இஸ்ரேல் பெய்டெய்னு (7 இடங்கள்), தொழிலாளர் கட்சி (7 இடங்கள்), யமினா கட்சி (7 இடங்கள்), நியூ ஹோப் (6 இடங்கள்), மெரேட்ஜ் (6 இடங்கள்), அரபு இஸ்லாமிக் ராம் (4 இடங்கள்) ஆகிய கட்சிகள் இடம் பெறுகின்றன.

இந்த கட்சிகள் பெரும்பான்மையை விட கூடுதலாக ஒரு இடம் (மொத்தம் 62 இடங்கள்) பெற்று விட்டன. இதனால் அரசு அமைப்பதில் சிக்கல் எழாது.

இந்தக் கூட்டணியை யேஷ் அதிட் கட்சியின் தலைவர் யெயிர் லாப்பிட் அறிவித்தார். முதலில் யமினா கட்சியின் தலைவரான நப்தாலி பென்னட் (வயது 49) பிரதமர் பதவி ஏற்பார். அவருக்கு பின்னர் யேஷ் அதிட் கட்சியின் தலைவர் யெயிர் லாப்பிட் பிரதமர் பதவிக்கு வருவார்.

புதிய பிரதமர் பதவி ஏற்பதற்கு முன்னர் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடக்கும். பெரும்பான்மை பலம் இருப்பதால் வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிகள் கூட்டணிக்கு வெற்றி கிடைத்து விடும் என்று நம்பப்படுகிறது.

யேஷ் அதிட் கட்சியின் தலைவர் யெயிர் லாப்பிட் விடுத்துள்ள ஒரு அறிக்கையில், எதிர்க்கட்சிகள் கூட்டாக அரசு அமைப்பது குறித்து ஜனாதிபதி ருவன் ரிவ்லினிடம் தெரிவிக்கப்பட்டு விட்டது.

நாடாளுமன்ற சபாநாயகர் யாரிவ் லெவினிடமும் தெரிவிக்கப்பட்டு விட்டது. இஸ்ரேலின் அனைத்து குடிமக்கள் நலனுக்காகவும் எங்கள் அரசாங்கம் செயல்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

இந்த அரசு எதிரிகளை மதிக்கும். இஸ்ரேல் சமூகத்தின் அனைத்து பகுதிகளையும் ஒன்றிணைக்க முழு சக்தியையும் பயன்படுத்துவோம் என கூறப்பட்டுள்ளது.

லாப்பிட்டுக்கு ஜனாதிபதி ருவன் ரிவ்லின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், புதிய அரசு அமைப்பதற்கான உங்கள் உடன்பாட்டுக்காக உங்களுக்கும், கட்சிகளின் தலைவர்களுக்கும் வாழ்த்துக்கள். புதிய அரசை அங்கீகரிப்பதற்கு விரைவில் நாடாளுமன்றம் கூடும் என்று எதிர் பார்க்கிறோம் என கூறினார்.

அரபு இஸ்லாமிய ராம் கட்சித்தலைவர் மன்சூர் அப்பாஸ் நிருபர்களிடம் பேசுகையில், இந்த முடிவு கடினமானதுதான். பல பிரச்சினைகள் இருந்தன.

ஆனால் ஒப்பந்தங்களை எட்டுவது முக்கியம். அரபு சமூகத்தின் நலனுக்காக இந்த ஒப்பந்தத்தில் பல விடயங்கள் உள்ளன என குறிப்பிட்டார்.

இஸ்ரேலில் நப்தாலி பென்னட் தலைமையில் புதிய அரசு பதவி ஏற்பதால், 12 ஆண்டு கால பெஞ்சமின் நேட்டன் யாஹு ஆட்சி முடிவுக்கு வருகிறது



## தடுப்பூசி போடாவிட்டால் அரச ஊழியர்களுக்கு சம்பளம் கிடையாது

### சிந்து மாகாண முதல் மந்திரி அறிவிப்பு

இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட டெல்டா வகை வைரஸ்கள் இப்போது பாகிஸ்தானிலும் பரவத் தொடங்கி உள்ளன.

அது சிந்து மாகாணத்தில் அதிகமாக தாக்கி வருகிறது.

பாகிஸ்தானில் மொத்த மக்கள் தொகை 22 கோடி. அவர்களில் 2 கோடியே 20 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தினமும் 2 லட்சம் பேருக்கு கொரோனாத்தடுப்பூசி போட்டு வருகிறார்கள். ஆனால் பாகிஸ்தானில் தடுப்பூசி போடுவதற்கு மக்கள் தயக்கம் காட்டி வருகிறார்கள்.

தடுப்பூசியால் உடலில் வேறு பாதிப்புகள் ஏற்படும் என்று வதந்திகள் பரவி வருகின்றன. இதனால் மக்களில் பலர் ஊசி போட முன்வரவில்லை.

படித்தவர்களும், அரசு பணிகளில் இருப்பவர்களும் கூட ஊசி போட தயங்குகிறார்கள்.

இந்தியாவில் ஏற்பட்டது போல இந்த வைரஸ் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே தடுப்பூசி திட்டத்தை தீவிரப்படுத்த பாகிஸ்தான் அரசு முயற்சித்து வருகிறது.

இந்த நிலையில் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாது என்று சிந்து மாகாண முதல்-மந்திரி முராத் அலிஷா அறிவித்துள்ளார்.



## கென்சிங்டன் அரண்மனை கண்காட்சியில் டயானானா அணிந்திருந்த திருமண உடை

இங்கிலாந்து இளவரசர் சார்லஸக்கும், டயானாவுக்கும் 1981ஆம் ஆண்டு, ஜூலை 29ஆம் திகதி லண்டன் செயின்ட் பால் தேவாலயத்தில் திருமணம் நடந்தது.

உலகமே வியந்து பார்த்த திருமணம் இது.

டயானாவின் 40ஆவது திருமண நாள் வர உள்ளது. இந்த தருணத்தில் அவர் திருமணத்தின் போது அணிந்திருந்த உடை, அங்குள்ள கென்சிங்டன் அரண்மனையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி கண்காட்சி அமைப்பாளர்கள் கூறும்போது, இளவரசி டயானா அணிந்திருந்த திருமண உடை, திருமண வரலாற்றில் மிகவும் பிரபலமான ஒன்றாகும் என குறிப்பிட்டனர்.

இந்த உடையின் வடிமைப்பாளர்களில் ஒருவரான எலிசபெத் இம்மானுவேல் இதுபற்றி கூறும்போது, இந்த உடையை வடிவமைப்பதற்காக இளவரசி டயானா என்னை தொலைபேசியில் அழைத்த தருணம் இன்னும் நினைவில் உள்ளது. அது ஒரு விசித்திரமான தருணம். அந்த வாழ்க்கை மீண்டும் ஒரு போதும் வராது என்பதை நினைவுபடுத்தும் தருணம் என குறிப்பிட்டார்.

இந்த உடைகளை காட்சிக்கு வைப்பதற்கு இளவரசர் வில்லியமும், அவரது சகோதரர் ஹாரியும் இரவலாக தந்து உதவி உள்ளனர்.

இந்த கண்காட்சி நேற்று தொடங்கியது. அடுத்த ஆண்டு ஜனவரி வரை நீடிக்கிறது. அனைவரும் காண முடியும்.




## வெள்ளி கிரகத்துக்கு 2 விண்கலங்கள் அனுப்ப தயாராகிறது நாசா

வீனஸ் என்று அழைக்கப்படுகிற வெள்ளி கிரகத்துக்கு 2 விண்கலங்களை அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பு நாசா அனுப்புவதாக அறிவித்துள்ளது.

இந்த திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் 50கோடி டொலர் (சுமார் ரூ.3,750 கோடி) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாசாவின் நிர்வாகி பில் நெல்சன் கூறியதாவது:-

30 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்படாத வெள்ளி கிரகத்தை ஆராய்வதற்கான ஒரு வாய்ப்பாக இந்த திட்டங்கள் அமைந்துள்ளன. இவ்விரு திட்டங்களும் வெள்ளி எவ்வாறு நரகத்தைப்போன்றதொரு உலகம் ஆனது, மேற்பரப்பில் ஈயம் உருகும் திறன் வந்தது எப்படி என்பதை ஆராய்வதுடன், இந்த கிரகத்தின் காற்று மண்டலம், பூகோளம் சார்ந்த அம்சங்களும் ஆராயப்படும் என அவர் கூறினார்.

வெள்ளி கிரகம் கடைசியாக 1990ஆம் ஆண்டு மெகல்லன் ஆர்பிட்டர் மூலம் ஆராயப்பட்டது.

வெள்ளி கிரகம், சூரியனுக்கு அடுத்தபடியாக அதிக வெப்பமான கிரகம் ஆகும். இதன் மேற்பரப்பு வெப்ப நிலை, 500 டிகிரி செல்சியஸ் ஆகும். நாசாவின் வெள்ளி கிரக ஆய்வுப்பயணங்கள் 2028-2030 இடையே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மெக்சிக்கோவில் விளைநிலத்தை திடீரென உள்வாங்கிய பூமி

மெக்சிக்கோ நாட்டின், பியூப்லா மாகாணத்தில் உள்ள சாண்டா மரியா என்ற இடத்தில் உள்ள வயலில் திடீரென பூமி உள்வாங்கியது. இதனால் மிகப்பெரிய பள்ளம் தோன்றியது.

விண்கலம் தரையில் விழுந்தால் ஏற்படும் பள்ளம்போன்று காணப்படுகின்றது.

சுமார் 300 அடி அகலமும் 60 அடி ஆழமும் கொண்ட பள்ளம் உருவானதால், அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பள்ளத்தின் அகலம் இன்னும் சற்று அதிகமாகியிருந்தால், அந்த நிலத்தில் இருந்த ஒரு வீட்டை விழுங்கியிருக்கும். எந்த நேரத்திலும் பள்ளம் பெரிதாகலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது. திடீரென நிலம் உள்வாங்கியதால், பூகம்பம் ஏற்படப்போகிறது என்று பயந்த மக்கள் அந்தப் பகுதியை விட்டு ஓட்டம் பிடித்தனர். பள்ளம் விழுவதற்கு முன் இடி இடித்ததுபோன்ற சத்தம் கேட்டதாக அந்த நிலத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

பின்னர் ஒருவழியாக பயம் விலகிய மக்கள் அந்த பகுதிக்குச் சென்று பள்ளத்தை எச்சரிக்கையுடன் பார்த்தனர். அந்த பள்ளத்தில் நீர் நிரம்பி மிகப்பெரிய கிணறு போன்று காட்சியளிக்கிறது. குறிப்பிட்ட இடத்துக்குக் கீழே பூமியில் பாறைகள் குறைவாக இருக்கின்றமையும், திடீரென நீரோட்டம் ஏற்பட்டாலும் இப்படி பள்ளம் தோன்றும் என்று புவியியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சிங்க்ஹோல் என்று அழைக்கப்படும் இந்த பள்ளமானது, பூமியின் மேற்பாறைகளை நீரோட்டம் கரைப்பதால் ஏற்படுவதாகும்.

காலைக்கதிர்



# மகமார் மையவாடியின் செயற்பாடு இடை நிறுத்தம்; விசேட சந்திப்பு

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மகமார் மையவாடியின் செயற்பாடு இடை நிறுத்தப்பட்டமை தொடர்பாக ஆராயும் விசேட சந்திப்பு கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மட் கனி தலைமையில் நேற்றிரவு (3) நடைபெற்றது.

கிண்ணியா பிரதேசத்தில் கொவிட் 19 ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்காக கிண்ணியா பிரதேச செயலாளர், கிண்ணியா சுகாதார பிரிவு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உலமா சபையினர் மற்றும் அரசியல்வாதிகள் சிவில் அமைப்புக்கள் என பலரது முயற்சியும் கோரிக்கைக்கும் அமைவாக கிண்ணியா மகமார் மையவாடிக்கான அனுமதி கிடைத்த நிலையில் நடைமுறைபடுத்தலில் சில தடைகள் உள்ளன எனவும், பின்பு இதனை இடை நிறுத்தம் செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவின் கவனத்திற்கு அவரின் இணைப்பாளரும் கந்தளாய் பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர்ஊடாககொண்டு செல்லப்படுவதற்காக இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது நாடாளமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரல தற்போது கொவிட் 19 தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமையால் அவருடைய இணைப்பு செயலாளரும், கந்தளாய் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.சி.எம். ஜவாஹிரிடம் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்று விரைவில் இதனை பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடல் கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஜிப்ரி, பிரதேச செயலாளர் எம். கனி, சுகாதார வைத்தியதிகாரி வைத்தியர் றிஸ்வி நகர சபை உறுப்பினர்களான ஏ.எம். மஸ்தி, சட்டத்தரணி, முகம்மட் ராபி உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.



# 32 பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இன்று அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டது

காரைதீவு பிரதேச செயலகத்தில் இன்று (04) காலை பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் உட்பட 32 பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் ஒருவர் மட்டும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டமையுடன் ஏனையோர்களின் பரிசோதனை முடிவுகள் நெக்கடிவாக வந்துள்ளன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். வேல்முருகு, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர், நுளம்புகள் தடுப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட 32 உத்தியோகத்தர்களுக்கான அன்டிஜன் பரிசோதனையிலையே ஒருவருக்கு கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தவார நடுப்பகுதியில் காரைதீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கும் அவருடைய குடும்பத்தினர் மூவரும் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டன குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவால் பாதிப்புக்குள்ளான இரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்

கொரோனாவினால் இரு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனாவின் 3ஆவது அலை அம்பாறை மாவட்டத்தில் அச்சுறுத்தலாக உருவாகி உள்ள நிலையில் நேற்று (3) எழுமாறாக எடுக்கப்பட்ட அன்டீஜன் பரிசோதனையை தொடர்ந்து அம்பாறை மாவட்டம் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் இரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரியிடம் வினவியபோது இவ்விடயம் தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஜி.சுகுணனிடம் கேட்டு பெற்று கொள்ளுமாறு ஊடகவியலாளரை கேட்டிருந்தார்.

இருந்த போதிலும் இரு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கல்முனை பிராந்தியத்தில் உள்ள சம்மாந்துறை வளத்தாப்பிட்டி பிரிவு முடக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் மூன்று நாள்களில் 47 நோயாளிகள் மற்றும் ஒருவர் இறந்தமையை தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஆறு பேர் கைது

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையினையும் மீறி மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்டு வந்த ஆறு பேரை மட்டக்களப்பு மாவட்ட மது வரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.



ஏறாவூர்ப் பற்று, ஏறாவூர், மண்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர்களிடம் விற்பனைக்காகவைக்கப்பட்டிருந்த 180 மில்லிலீற்றர் அளவு கொண்ட 100 மதுபான போத்தல்களும் மூன்று போத்தல்கள்ளும் மீட்கப்பட்டன என மட்டக்களப்பு மாவட்ட மதுவரி அத்தியட்சகர் எஸ்.ரஞ்சன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமையுடன் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றம் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கிழக்கு மாகாண உதவி மதுவரி ஆணையார் ஏ.தர்மசீலன் ஆலோசனைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட மதுவரி அத்தியட்சகர் எஸ்.ரஞ்சனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மது வரித்திணைக்கள பொறுப்பதிகாரி நியூட்டன் அவுஸ்கோனின் தலைமையில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருள் பைகளை விழுங்கியதால் உயிரிழந்தார் இளைஞர்

## மரண பரிசோதனையில் தெரியவந்த மர்மம்

மட்டக்களப்பில் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் 4 ஐஸ் போதைப் பொருள் பைகளை வாயில் போட்டு விழுங்கியதன் காரணமாக உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளதாக விசேட சட்ட வைத்திய அதிகாரி அரசுரட்ணம் இளங்கோவன் தெரிவித்தார்




மட்டக்களப்பில் 25 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலைய காவலில் அடைத்து வைக்கப்பட்ட இளைஞன் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதையடுத்து உயிரிழந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்தார் என உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் சடலத்தை நீதவான் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட்டார். அதே வேளை வாழைச்சேனை பொலிஸ் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த தலைமையில் விசேட பொலிஸ்குழு அமைக்கப்பட்டு விசாரணையிடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் விசேட சட்ட வைத்திய அதிகாரி அரசரெட்ணம் இளங்கோவன் தலைமையின் கீழ் இடம்பெற்ற பிரேத பரிசோதனையில் குறித்த நபர் 4 பக்கட்டுக்களை கொண்ட ஐஸ் போதைப் பொருளை வாயில் போட்டு விழுங்கிய நிலையில் அது நெஞ் சுப் பகுதியில் ஐஸ் போதைப் பொருள் வெடித்ததில் நுரையீரல் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளதாக விசேட சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார் .



## இங்கிலாந்து – நியூசிலாந்து முதலாவது டெஸ்ட் போட்டி

# மூன்றாவது நாள் ஆட்டம் இன்று

இங்கிலாந்து – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று நிறைவுக்கு வந்தபோது தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. றொரி பேர்ன்ஸ் 59, அணித்தலைவர் ஜோ ரூட் 42 ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன் தினம் ஆரம்பமான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 378 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அறிமுக வீரரான டெவொன் கொன்வே 200 ஓட்டங்களையும் ஹென்ரி நிக்கோல்ஸ் 61 ஓட்டங்களையும் பெற்றனர். இங்கிலாந்து அணியின் அறிமுக வீரர் ஒலி ரொபின்சன் 4 விக்கெட்டுக்களையும் மார்க் வுட் 3, ஜேம்ஸ் அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் – மகளிர் பிரிவு

# 3 ஆவது சுற்றில் எலினா, விலகினார் அஷ்லெ பார்டி!



பிரெஞ்ச் ஓபின் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, ரஷ்யாவின் மெட்வடேவ் இருவரும் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

இரண்டாவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை ஆன் லியுடன் நேற்று மோதிய எலினா ஸ்விடோலினா 6–0, 6–4 என்ற நேர் செட்களில் வென்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

உலகின் முதல் நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் அஷ்லெ பார்டி நேற்று போலாந்து வீராங்கனை மேக்தா லினெட்டுடன் மோதினர். காயம் காரணமாக ஆரம்பம் முதலே தடுமாற்றத்துடன் விளையாடிய அஷ்லெ, முதல் செட்டை 1–6 என்ற புள்ளிகள் கணக்கில் இழந்தார். இரண்டவது செட் 2–2 என்று இருந்தபோது அஷ்லெ, தான் போட்டியில் இருந்து விலகுகிறேன் என அறிவித்தார். அதனால் மேக்தா மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தார். இடுப்பில் ஏற்பட்டிருந்த காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த அஷ்லெ தொடரிலிருந்து விலகியமை டென்னிஸ் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அமெரிக்க வீராங்கனைகள் சோபியா கெனின், ஜெசிகா பெகுலா, துனிஷியாவின் ஒன்ஸ் ஜெபேயூர், செக் குடியரசின் கரோலினா முசோவா, உக்ரைனின் மார்டா கொஸ்ட்யுக் ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

## பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர்

# ரஷ்யாவின் மெட்வடேவ் 3ஆவது சுற்றுக்குத் தகுதி!

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்துவரும் பிரெஞ்ச் ஓபின் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றில் உலகத் தரவரிசையில் இரண்டாமிடத்திலுள்ள ரஷ்ய வீரர் டனில் மெட்வடேவ் 3–6, 6–1, 6–4, 6–3 என்ற செட்களில் அமெரிக்க வீரர் ரொம்மி போலை வீழ்த்தி மூன்றாவது சுற்றிற்கு நுழைந்துள்ளார்.

அவர் தனது மூன்றாவது சுற்றில், அமெரிக்காவின் ரெய்லி ஒபெல்காவை எதிர்கொள்ளவிருக்கிறார்.







# இந்தியக் கிரிக்கெட் அணிகள் இங்கிலாந்தைச் சென்றடைந்தன

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கெதிரான கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்பதற்காக இந்திய ஆண்கள் மற்றும் மகளிர் அணிகள் நேற்று லண்டன் சென்றடைந்தன. அங்கு அவர்கள் நட்சத்திர விடுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணி அங்கு நியூசிலாந்துக்கு எதிராக உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியிலும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும், இந்திய மகளிர் அணி இங்கிலாந்துக்கு எதிராக ஒரு டெஸ்ட், தலா 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள், ரி–20 போட்டிகளில் விளையாடவுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களாக இந்திய வீர, வீராங்கனைகளும் அவர்களோடு பயணமாகும் குடும்பத்தினரும் அலுவலர்களும் மும்பையில் நட்சத்திர விடுதியொன்றில் தனிமைப்படுத்தப் பட்டிருந்தனர். பின்னர், நேற்று முன்தினம் நள்ளிரவு தனி விமானத்தில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டிருந்தனர்.

அங்கிருந்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி நடக்கவுள்ள சவுத்தாம்டனுக்கு அழைத்துச்செல்லப்பட்ட அவர்கள் அங்கும் நட்சத்திர விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்ததும் அணி வீர வீராங்கனைகள் தங்கள் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 125 வருடச் சாதனையை முறியடித்த நியூசிலாந்தின் டெவொன் கொன்வே

நியூசிலாந்து – இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணியில் அறிமுகமான டெவொன் கொன்வே, முதல் நாளே சதமடித்தார். அதன் மூலம் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் லோர்ட்ஸ் அரங்கில் வெளிநாட்டைச் சேர்ந்த அறிமுக வீரர் ஒருவர் சதமடித்த சாதனையை இவர் படைத்துள்ளார். இறுதியாக இந்திய வீரர் கங்குலி 25 வருடங்களுக்கு முன்னர் தனது அறிமுகப் போட்டியில் சதமடித்திருந்தார்.

போட்டியின் இரண்டாவது நாளான நேற்று தொடர்ந்து விளையாடிய டெவொன் கொன்வே 154 ஓட்டங்களைக் கடந்த போது 125 வருட கால சாதனை ஒன்றையும் முறியடித்தார். 1896 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியில் தனது டெஸ்ட் கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொண்ட ரஞ்ஜித்சிங்ஜி அடித்த 154 ஓட்டங்களே இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் அறிமுகத்தில் வீரரொருவர் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தன. அந்தச் சாதனையைக் கடந்த கொன்வே, அறிமுகப் போட்டியில் 200 ஓட்டங்களை எடுத்த வீரர்களின் பட்டியலிலும் இணைந்துகொண்டார்.



Green Media House (pvt) Ltd இன்

காலைக்கதிர் Kalaikkathir

செம்மண்

# பத்திரிகைகளினால் நடாத்தப்படும் மாபெரும் லொக்டவுன் காணொலி போட்டி

தரம் 01 முதல் 10 வரையான மாணவர்கள் பெற்றோரின் துணையோடும் O/L மற்றும் A/L மாணவர்கள் தங்களது சுயமுயற்சியுடனும் இந்தப் போட்டியில் பங்கேற்க முடியும்..

**லொக்டவுனை எப்படிக் கடப்பது என்ற யோசனையா..??**

**கவலையை விடுங்கள்.. உங்களுக்காகவே இந்தப் போட்டி..**

## நீங்கள் செய்யவேண்டியது,

இரண்டு நிமிடங்களுக்கு குறையாமலும், ஐந்து நிமிடங்களுக்கு மேற்படாதவாறும் கீழ்வரும் தலைப்புகளிலில் ஏதேனுமொன்றைத் தெரிவு செய்து எமக்கு அனுப்பி வைக்க வேண்டியது மட்டுமே..

**நீங்கள் உருவாக்குகின்ற காணொலிகள் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றைக் கருப்பொருளாகக் கொண்டமைய வேண்டும்.**

1. லொக்டவுன் காலத்தை பயனுள்ளதாக கழிக்க நீங்கள் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கை
2. உங்கள் வீட்டின் சுவாரஸ்யம் என்ன..??
3. அபிநயத்துடனான கதை சொல்லல்
4. இரண்டு அல்லது மூன்று கதாப்பாத்திரங்களை உள்ளடக்கிய குறுநாடகம்.
5. நகைச்சுவைக் காட்சிகள்
6. புதுவித சமையல்
7. ஏதேனும் ஒரு தலைப்பிலான குறும்படம்

**போட்டிக்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது. 06.06.2021**

நீங்கள் உருவாக்குகின்ற காணொலிகளை கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது வட்சப் இலக்கத்திற்கோ அனுப்பி வைக்கமுடியும்.

**வெற்றிபெறுபவர்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுவதுடன், தரமான பதிவுகள் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள யூடியூப் தளத்தில் காட்சிப்படுத்தப்படும்.**



**அனுப்பவேண்டிய,**
**மின்னஞ்சல் முகவரி:** kalaikkathiredu@gmail.com
**வட்சப் இலக்கம்:** 0764438622

# 1,150 தொன்னுக்கும் அதிகளவிலான கப்பல் கழிவுகள் இதுவரை சேகரிப்பு





எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பல் எரிந்தமை, அதிலிருந்த இரசாயனங்கள் உள்ளிட்ட பதார்த்தங்கள் கடலினுள் கலந்தமை காரணமாக இலங்கையின் கடற்பரப்புக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்த திரவியங்கள் கடலுடன் கலந்து அவை கரையொதுங்க ஆரம்பித்தது முதல், இதுவரை சுமார் 1,150 தொன்னுக்கும் அதிகமான கழிவுப் பொருள்கள் கடற் கரைகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸார் இணைந்து இந்த கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்தி வருகின்றமையுடன், அவை அனைத்து கொள்கலன்களில் அடைக்கப்பட்டு, வத்தளை பொலிஸ் நிலையம் அருகே, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் வரும் விசேட இடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இதுவரை இராணுவத்தின் 14 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பாவின் கீழ் 350 இராணுவத்தினர் முன்னெடுத்த பணிகளில், கரையொதுங்கிய கழிவுப் பொருள்கள் மற்றும் இரசாயனங்கள் என 25 கொள் கலன்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு, சிலாபம், மொரட்டுவை மற்றும் வெள்ளவத்தை கடற் கரைகளிலிருந்து அவை மீட்கப்பட்டுள்ளமையுடன் தொடர்ந்தும் அப்பகுதி கடற்கரைகளில் கரையொதுங்கும் கப்பல் கழிவுப் பொருள்களை அகற்றும் நடவடிக்கைக்ளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க கரையோரப்பகுதியில் கரையொதுங்கும் கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகளில் விமானப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

விமானப்படையின் சுமார் 1,500 பேர் வரை அப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறும் விமானப்படை ஊடகப் பேச்சாளர் குறூப்கப்டன் துஷான்விஜேசிங்க, 270 தொன் கழிவுப்பொருள்கள் இவ்வாறு சேகரிக்கப்பட்டு 9 கொள்கலன்களில் அவை மத்திய சுற்றாடல் அதிகார சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேநேரம் கடற்படையின் களனி கட்டளைத் தளபதி கொமாண்டர் ஈ.எம்.ஏ. பண்டாரவின் கீழ், கரையோர சுத்திகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் நிலையில், லெப்டினன் ஏ.டப்ளியூ.ஏ.ஜ. விஜேகோனின் கீழான படையினர் 485 பேர் அதில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் உஸ்வெட்ட கொய்யா முதல் பமுனுகம வரையிலான 9 கிலோ மீற்றர் கடற் கரையோரப்பகுதியில் இருந்து மட்டும் 584 தொன் கழிவுப் பொருள்களை இதுவரை அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதனைவிட, கடற்கரையோரங்களில் குவியும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து கடலில் கலந்த திரவியங்கள், கழிவுகளை அகற்றும் பணிகளில் 300 பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அதன்படி, மொத்தமாக முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 620 பேர், கரை ஒதுங்கும் கப்பல் கழிவுகள், பதார்த்தங்களை அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான கடற்கரையோரங்களில் சிறிய பிளாஸ்டிக் உருண்டைகள் கரையொதுங்கி வரும் நிலையில் அவை பெரும் சவாலாக மாறியுள்ளன என சமுத்திர சூழல் பாதுகாப்பு பிரிவினர் கூறுகின்றனர்.

சுமார் 20 மில்லிகிராம் உடைய இவ்வாறான பிளாஸ்டிக் உருண்டைகள் 400 கோடி வரை, தீப் பரவலைத் தொடர்ந்து கடலுடன் கலந்திருக்கலாம் என சூழலியலாளர்கள் நம்புகின்றனர்.

## மின் தடையால் பாதிப்பு!

இலங்கையில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற கால நிலையால் 44 ஆயிரம் நுகர்வோருக்கு மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது என மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் கடந்த இரண்டு நாள்களில் மின் துண்டிப்பு தொடர்பில் 23 ஆயிரம் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் மின்சக்தி அமைச்சின் ஊடக பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

களுத்துறை, குளியாப்பிட்டி, குருநாகல், ஹொரணை, மத்துகம, நாரம்மல, தம்புள்ள, அக்குரஸ்ஸ மற்றும் கேகாலை ஆகிய இடங்களில் மின் தடை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும், தற்போது இந்தப் பகுதிகளில் மின் துண்டிப்புகளை சீராக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனவும் மின்சக்தி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாத்தறையில் செம்மஞ்சள் நிறத்திலான இரண்டு வௌவால்கள் கண்டுபிடிப்பு



செம்மஞ்சள் நிறத்திலான இரண்டு வௌவால்கள் மாத்தறை பிடபெத்தர, மஹபொதுவில பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

காணி ஒன்றின் தேயிலை மரம் ஒன்றில் இருந்து குறித்த வௌவால்கள் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ.பீ.கே. பிரேமசிறி என்ற நபரால் குறித்த இரண்டு செம்மஞ்சள் வௌவால்களும் கண்டு பிடிக்கப் பட்டுள் ளன.

சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

அந்துப்பூச்சி போன்ற ஒரு விலங்கைக் கண்டேன். பறந்து சென்று தேயிலை மரத்தின் கிளையில் விழுந்தது. அருகில் சென்று பார்த்தேன். அப்பொழுதுதான் தெரிந்தது. அது வௌவால் என்று. முதலில் ஒரு வௌவாலைதான் பார்த்தேன். பின்னர்தான் மற்றைய வௌவாலை கண்டேன். - என்றார்.

பிரேமசிறியால் குறித்த வௌவால்கள் தொடர்பில் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்தமையைத் தொடர்ந்து அரிய வகை விலங்காக கருதி அவற்றைத் தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கம்பஹா மாவட்டத்தை புரட்டியெடுக்கும் கொவிட்

இலங்கையில் நேற்றைய தினம் பதிவான 3 ஆயிரத்து 306 கொரோனா நோயாளர்களில் பெரும்பாலானோர் கம்பஹா மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 1,004 என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்திலிருந்து 501 பேர் மற்றும் பதுளை மாவட்டத்திலிருந்து 251பேரும் பதிவாகியுள்ளனர். ஏனைய 1,550 பேரும் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முப்படையினரால் மற்றும் சுற்றுலா விடுதிகளினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற 52 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களினுள் 3,950 பேர் நேற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்று காலை 17 தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களிலிருந்து 551 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்து வீடுகளுக் குத் திரும்பியுள்ளனர். இதேவேளை முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் பிரிவுகள் மற்றும் கிராம அதிகாரி பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றமையுடன், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ள பயண கட்டுப்பாடு மேலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## களுத்துறை மாவட்டத்தில் 215.5 மி.மீ. மழைவீழ்ச்சி

### பல பகுதிகளில் பலத்த மழை

நாட்டின் சில பகுதிகளில் 150 மி.மீ மழை வீழ்ச்சி பதிவாகியிருப்பதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக களுத்துறை மாவட்டத்தின் இங்கிரியவில் 215.5 மி.மீ. மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ. அளவான பலத்தமழைவீழ்ச்சி பதிவாகுமென அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

## வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு பொதிகள்





வவுனியா, ஜூன் 04

பயணத்தடை காரணமாக வவுனியா கற்குளத்தில் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய முடியாது காணப்பட்ட மக்களுக்கு வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

160 குடும்பங்களுக்கு இவ்வாறு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டமையுடன் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு பால்மா பைக்கெற்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது வவுனியா அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன, கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். விஸ்னுதாசன், கிராம சேவகர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2021இல் வெளியிடப்பெற்றது.